# 8. செய்யுளியல்

தமிழரின் இலக்கிய மரபு என்பது பாட்டு மரபாகும். தாலாட்டில் தொடங்கும் பாட்டுமரபு ஒப்பாரிவரை அப்பாட்டு மரபாகவே அமைந்துள்ளது. ஐரோப்பியரின் வருகைக்கு முன்வரை அனைத்தும் கட்டுக்கோப்புடைய யாப்பு வடிவத்தைக் கொண்டவையாகவே வெளிப்படுத்தப்பட்டன. தமிழிலக்கணத்தின் நான்காம் கூறாக விளங்கும் யாப்பு தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. பிற்கால யாப்பிலக்கண நூல்கள் வடிவத்திற்கு முதன்மை தந்தன. ஆனால் செய்யுளின் இயல்புகளை விரிவாகக் கூறும் தொல்காப்பியர் வடிவ உறுப்புகள், பாடுபொருள்கள், வனப்புகள், சந்த வேறுபாடுகள் ஆகிய அனைத்தையும் எடுத்துரைக்கிறார். செய்யுளின் மரபுகளை விரிவாகப் பேசும் தொல்காப்பியர் செய்யுளியலில் 26 முதன்மை உறுப்புகளையும் 8 வனப்புகளையும் அழகுற விளக்குகிறார். தொல்காப்பியத்தில் மிகப்பெரியதாக அமைந்த இச்செய்யுளியல் 235 நூற்பாக்களைக் கொண்டதாகும். ஆயினும் நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் செய்யுளியல் நூற்பாக்களை 243 ஆகக் காட்டுகின்றனர். இவ்வியலில் இடம்பெற்ற செய்திகளைச்,

1. செய்யுள் உறுப்புகள்
2. வனப்புகள்

என்னும் இருபெரும் பிரிவுக்குள் அடக்கலாம்.

## செய்யுள் உறுப்புகள் (26 + 8 = 34)

310. மாத்திரை[1] எழுத்தியல்[2] அசைவகை[3] எனாஅ
யாத்த சீரே[4] அடி[5]யாப்பு[6] எனாஅ
மரபே[7] தூக்கே[8] தொடைவகை[9] எனாஅ
நோக்கே[10] பாவே[11] அளவியல்[12] எனாஅ
திணையே[13] கைகோள்[14] கூற்றுவகை[15] எனாஅ
கேட்போர்[16] களனே[17] காலவகை[18] எனாஅ
பயனே[19] மெய்ப்பாடு[20] எச்சவகை[21] எனாஅ
முன்னம்[22] பொருளே[23] துறைவகை[24] எனாஅ
மாட்டே[25] வண்ணமோடு[26] யாப்பியல் வகையின்
ஆறுதலை இட்ட அந்நால் ஐந்தும்
அம்மை[27] அழகு[28] தொன்மை[29] தோலே[30]
விருந்தே[31] இயைபே[32] புலனே[33] இழைபு[34]எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்புஎன
வல்லிதிற் கூறி வகுத்துஉரைத் தனரே.

(இ-ள்) மாத்திரை முதல் வண்ணம் ஈறாக அமைந்த இருபத்தாறும் யாப்பாகிய செய்யுளின் உறுப்புகளாகும். அத்தன்மைத்தன்றி வேறுபட அமைந்த அம்மை முதலாகப் பொருத்தமாகக் கூறப்பட்டவை எட்டு. இவ்வாறு தொகைப்படுத்தப்பட்ட முப்பத்து நான்கையும் நல்லிசைப் புலவர்கள் செய்யுளுக்குரிய உறுப்புகள் எனத் திட்பநுட்பம் தோன்றப் பாகுபடுத்தினர்.

**செய்யுள் உறுப்புகள் (26)**

| | | | |
|---|---|---|---|
| 1.மாத்திரை | 2.எழுத்தியல் | 3.அசை | 4. சீர் |
| 5. அடி | 6.யாப்பு | 7.மரபு | 8.தூக்கு |
| 9.தொடை | 10.நோக்கு | 11.பா | 12.அளவு |
| 13.திணை | 14.கைகோள் | 15.கூற்று | 16.கேட்போர் |
| 17.களன் | 18.காலம் | 19. பயன் | 20.மெய்ப்பாடு |
| 21. எச்சம் | 22. முன்னம் | 23.பொருள் | 24.துறை |
| 25.மாட்டு | 26.வண்ணம் | | |

**வனப்பு வகைகள் (8)**

| | | | |
|---|---|---|---|
| 1. அம்மை | 2. அழகு | 3. தொன்மை | 4.தோல் |
| 5. விருந்து | 6. இயைபு | 7.புலன் | 8.இழைபு |

இவ்வாறு அமைந்த முப்பத்து நான்கும் செய்யுளுக்குரிய உறுப்புகளாகும். (1)

**மாத்திரைகளும் எழுத்து வகையும் (2)**

311. **அவற்றுள்**
**மாத்திரை வகையும்[1] எழுத்தியல் வகையும்[2]**
**மேற்கிளந் தனவே என்மனார் புலவர்.**

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கு. அவற்றுள் *1.*எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளும் *2.*அவ்எழுத்துகளுக்குரிய வகைகளும் முன்னர் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டவை ஆகும். அவற்றுள் எந்த மாற்றமும் இல்லை என்று தெளிவாகச் சொல்லுவர் புலவர்.

**1. எழுத்துகளுக்குரிய மாத்திரை**

எழுத்துகளை ஒலிப்பதற்குரிய கால அளவே மாத்திரை என்று கூறப்படும். எழுத்துகள் ஒலிக்கும் தன்மைக்கு ஏற்பப் பலவாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவையாவன

1. குற்றெழுத்து → 1
2. நெட்டெழுத்து → 2
3. உயிரளபெடை → 3
4. குற்றியலிகரம் → ½
5. குற்றியலுகரம் → ½
6. ஆய்தம் → ½

7. மெய் → ½
8. ஒற்றளபெடை → 1
9. ஐகாரக் குறுக்கம் → 1
10. மகரக்குறுக்கம் → ¼
11. உயிர்மெய்க்குறில் → 1
12. உயிர்மெய் நெடில் → 2

2. எழுத்துகளுக்குரிய வகை

1. உயிரெழுத்து → குற்றெழுத்து, நெட்டெழுத்து
2. மெய்யெழுத்து → வல்லினம், மெல்லினம், இடையினம்
3. சார்பெழுத்து → குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம். (2)

## அசை வகைகள் (2+2=4)

**இயலசை - நேர், நிரை (2)**

**312. குறிலே நெடிலே[1] குறில்இணை குறில்நெடில்[2]**
**ஒற்றொடு வருதலொடு[3] மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையும் என்றிசின் பெயரே.**

**(இ-ள்)** 1.குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் தனியே வருதல் 2.குறில் இணைந்தும் குறில்,நெடில் இணைந்தும் வருதல் 3.அவற்றொடு ஒற்றுப் பெற்று வருதல் உண்டு. அவற்றை ஆராயும்காலத்து அவை முறையே நேரசை, நிரையசை எனப் பெயர் பெறும்.

குறில், குறில் ஒற்று; நெடில், நெடில் ஒற்று → நேரசை

**(எ-டு)** கோழி, வேந்தன்

கோ → நெடில், ழி → குறில்;
வேந் → நெடிலொற்று, தன் → குறிலொற்று

குறிலிணை, குறிலிணை ஒற்று; குறில்நெடில், குறில்நெடில் ஒற்று → நிரையசை

**(எ-டு)** வெறி, நிறம், சுறா, குரால்

வெறி → இருகுறில், சுறா → குறில்நெடில்;
நிறம் → இருகுறிலொற்று, குரால் → குறில் நெடிலொற்று. (3)

**உரியசை - நேர்பு, நிரைபு (2)**

**313. இருவகை உகரமோடு இயைந்தவை வரினே**
**நேர்பும்[1] நிரைபும்[2] ஆகும் என்ப**
**குறில்இணை உகரம் அல்வழி யான.**

**(இ-ள்)** மேற்சொல்லப்பட்டவை நேர், நிரை என்னும் இரண்டு அசைகளாகும். அவற்றோடு குற்றியலுகரமும் முற்றியலுகரமும் பொருந்தி வரும். அவற்றை முறையே 1.நேர்பசை 2.நிரைபசை என்று சொல்லுவர் புலவர். குற்றெழுத்தினை அடுத்து உகரம் வராத நிலையில் இவ்வியைபு பொருந்தி வரும்.

**நேர்பு அசை :** காது, காற்று, கன்று; காவு, சார்பு, கல்லு.

**நிரைபு அசை :** வரகு,அரக்கு, மலாடு, பனாட்டு; கதவு, புணர்வு, உருமு, வினாவு

**விளக்கம் :** நேர்பசை, நிரைபசை என்பவற்றைக் காக்கைபாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர்கள் அசைகளாகக் கொள்ளவில்லை. இவற்றை ஈரசைகளாகக் கொண்டனர். இவை வெண்பாவின் ஈற்றில் வரும் என உடன்பட்டனர். குற்றியலுகரம் சில இடங்களில் அலகு பெறாது என்றும் கூறினர். இவ்வாறாகப் பல காரணங்களைக் கூறும் இளம்பூரணர் நேரசை, நிரையசை, நேர்பசை, நிரைபசை என்று அசைகளை நான்காகக் கொள்வதே வலியுடைத்து என்று கூறுகிறார். இவ்வசைகள் நான்கும் வெண்பாவின் ஈற்றில் வரும்.

**நேர்** - பிறவி ...... இறைவனடி சேரா **தார்** (குறள்.10)
**நிரை** - வேண்டுதல் ..... யாண்டும் இடும்பை **இல** (குறள்.4)
**நேர்பு** - இருள் ..... பொருள்சேர் புகழ்புரிந்தார் **மாட்டு** (குறள்.5)
**நிரைபு** - தனக்குவமை ..... மனக்கவலை மாற்றல் **அரிது** (குறள். 7)

அலகிடும் நிலையில்,

நேரசைக்கு ஓர் அலகு; நிரையசைக்கு இரண்டு அலகு
நேர்பசைக்கு மூன்று அலகு; நிரைபசைக்கு நான்கு அலகு
எனக் கணக்கிட வேண்டும்.

புகு, பசு, கொடு, அணு, தபு, கொழு என்பன போன்றவை குற்றெழுத்தினை அடுத்து உகரம் வந்தவை. இவற்றை உரியசைகளாகக் கொள்ளக் கூடாது. இவை முற்றியலுகரத்தால் அமைந்த நிரையசைகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (4)

**அசைகளின் வகைகள் (2)**

**314. இயல்அசை முதல்இரண்டு[1] ஏனவை உரியசை.[2]**

**(இ-ள்)** நேர், நிரை, நேர்பு, நிரைபு என்பன நான்கும் அசைகளாகும். அவற்றுள் 1.நேர், நிரை என்பன இயலசைகள் 2.எஞ்சிய நேர்பும் நிரைபும் உரியசைகளாகும்.

**விளக்கம் :** முற்கூறப்பட்ட அசைகள் நான்கு. அவற்றுள் **நேர், நிரை** என்னும் முதல் இரண்டு அசைகளும் இயல்பாக அமைவன. ஆகையால் அவை **இயலசை** எனப் பெயர் பெற்றன. எஞ்சிய **நேர்பு, நிரைபு** என்னும் இரண்டு அசைகளும் நேர், நிரை என்னும் அசைகள் செய்யும் தொழில் செய்வதற்கு உரித்தாக்கிக் கொள்ளப்பட்டவை. ஆதலால் அவை **உரியசை** எனக் குறிக்கப்பட்டன. இவற்றை ஆட்சியும் குணனும் காரணமாகப் பெற்ற பெயர் என்கிறார் பேராசிரியர். (5)

**தனிக்குறில் நேரசை ஆகாமை**

**315. தனிக்குறில் முதலசை மொழிசிதைத்து ஆகாது.**

**(இ-ள்)**. தொடர்மொழியில் இடம்பெறும் மொழியைச் சிதைத்து முதலில் நிற்கும் தனிக்குறிலை நேரசையாகக் கொள்ளுதல் கூடாது.

அகர முதல எழுத்தெலாம் ஆதி (குறள்.1)

இக்குறட்பாத் தொடரில் அமைந்த அகர என்பதை அ/கர எனவும் முதல என்பதை மு/தல எனவும் பிரிக்கக் கூடாது. அதாவது ஒற்றுமைப் பட்டிருக்கின்ற எழுத்தைப் பிரித்து அசை கொள்ளக் கூடாது. இதுவே மொழிசிதைத்தலாகும். எனவே அக/ர , முத/ல எனப் பிரிக்க வேண்டும்.

மொழி சிதையாமல் விட்டிசைத்து நிற்கின்ற நிலையில் தனிக்குறில் நேரசையாகக் கொள்ளப்படும்.

அஉ அறியா அறிவில் இடைமகனே
நொஅலையல் நின்னாட்டை நீ

இத்தொடரில் அ,நொ என்பன தனியே விட்டிசைப்பதால் அவை தனிக்குறிலாய்ச் சீரின் முதலில் நின்று நேரசை ஆயின.

... அஆ இழந்தான்என் றெண்ணப் படும். (நாலடியார்.9)

இதில் அ,ஆ என்பன குறில் நெடில். ஆயினும் அ என்பது ஆவோடு சேராமல் பிரிந்து ஒலிப்பதால் தனித்தனி அசை ஆயின (நேர் நேர்). (6)

**குற்றியலிகரம் அலகு பெறாமை**

**316. ஒற்றுஎழுத்து இயற்றே குற்றிய லிகரம்.**

**(இ-ள்)** குற்றியலிகரம் மெய்யெழுத்தினை ஒத்த தன்மை உடையதாகும்.

**விளக்கம் :** செய்யுளில் இடம்பெறும் மெய்யெழுத்து அலகு பெறாது. அதுபோலக் குற்றியலிகரமும் அலகு பெறாது என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். **(எ-டு)**

பேதைமை என்ப தியாதென வினவின் (மணிமேகலை.24:111)

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். (குறள்.66)

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளுள் தியாதென, தியாழினி என்பவை குற்றியலிகர முதன்மொழிகளாகும். இவற்றுள் குற்றியலிகரம் அலகு பெறாமல் யாதென, யாழினி எனக் கொண்டு அலகிடப் பெற்றன. (7)

**முற்றியலுகரம் அசை ஆகாத இடம்**

**317. முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.**

**(இ-ள்)** ஒற்றுமைப்பட்டிருக்கும் முற்றியலுகரத்தைப் பிரித்து நேர்பசை, நிரைபசையாகக் கொள்வதில்லை. அது ஈற்றடியில் தனியசையாக நிற்றலும் இல்லை.

நேரசையோடும் நிரையசையோடும் முற்றியலுகரம் சேர்ந்து மொழி சிதையாமல் நின்றால் மட்டுமே அவை நேர்பசை, நிரைபசை என்று கொள்ளப்படும். **(எ-டு)**

அங்கண் மதியம் **அரவு**வாய்ப் பட்டென

இதில் அரவு என்பது மொழி சிதையாமையால் நிரைபசை ஆயிற்று.

பெருமுத் தரையர் பெரிதுவந்து ஈயும் (நாலடியார்.200)

இதில் பெரு என்பதை அடுத்து முத் என்னும் அசை நின்றது. இவ்வசையை முன்னுள்ள அசையின் எழுத்தொடு சேர்க்கப் பெருமு என்றாகும். இது மொழியைச் சிதைத்து முற்றியலுகரத்தைச் சேர்த்ததால் அது நிரைபசை ஆகாது.

இனமலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் **புல்லு.**

மஞ்சுசூழ் சோலை மலைநாட ஃறுத்தாலும்
அஞ்சொல் மடவாட் **கருளு.**

இவற்றுள் புல்லு, அருளு என்பவை தொல்காப்பியர் கருத்துப்படி பொருந்தாதவை. இவ்வாறு சில இடங்களில் வருவனவும் உண்டு. அவ்வாறு வருவனவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார் இளம்பூரணர். (8)

**இருவகை உகரமும் அசையாதல்**

**318. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.**

**(இ-ள்)** குற்றியலுகரமும் முற்றியலுகரமும் ஒற்றோடு சேர்ந்து நிற்கின்ற இடங்கள் உண்டு. அவ்விடங்களில் அவை தனியசையாகி (ஈரசையாகி) நிற்கவும் பெறும். **(எ-டு)**

**நெருப்பு**ச் சினந்தணிந்த நிணந்தயங்கு (புறநானூறு.125)
**கண்ணு**ம் படுமோ என்றிசின் யானே (நற்றிணை .61)

இத்தொடர்களில் **நெருப்பு** என்பது **வன்தொடர்க் குற்றியலுகரம். கண்ணு** என்பது **முற்றியலுகரம்.** இவை முறையே **நிரைபு, நேர்பு** என அலகிடப் பெறும். இவற்றோடு ஒற்றெழுத்துச் சேர்ந்த நிலையில் **நெருப்புச்** (நெருப்/புச்) என்பது **புளிமா** என்றும் **கண்ணும்** (கண்/ணும்) என்பது **தேமா** என்றும் ஈரசைகளாகக் கொள்ளப்படும்.

(9)

**வகையுளி**

319. **அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே.**

**(இ-ள்)** அசையையும் சீரையும் ஓசைக்கு ஏற்பச் சேர்த்துப் பாகுபாடு செய்து உணர்த்துவர். இவ்வாறு வகைப்படுத்திக் கூறுவது வல்லோர்களின் நெறியாகும்.

ஒரு பாவிற்குரிய சீர், தளைகள் பிறழாமல் இருப்பதற்காகச் சொல்லில் இடம்பெற்ற அசைகளை அறுத்து முன்னும் பின்னுமாகச் சேர்ப்பர். ஓசையாகிய இசைக்கு முதன்மை தந்து சொற்களைப் பிரித்துச் சேர்ப்பது வகையுளி என்று கூறப்படும். இம்முறையில் பொருளை நோக்குவதில்லை. **(எ-டு)**

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (குறள்.3)

இக்குறட்பாவில் வாழ்வார் எனப் பொருளுக்கு ஏற்பச் சீராக்கினால் வெண்பாவிற்குரிய செப்பலோசை கெடும். எனவே வாழ் என்பதை முன் நிற்கும் சீரோடு அறுத்துச் சேர்க்க ஓசை கெடாது.

நிலமிசை நீடு வாழ்வார் → பொருள் நோக்கிய தொடர்
நிலமிசை நீடுவாழ் வார் → ஓசை (இசை) நோக்கிய தொடர்.

(10)

**சீரின் இலக்கணமும் – வகைகளும் (2)**

320. **ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும்
சீர்இயைந்து இற்றது சீர்எனப் படுமே.**

**(இ-ள்)** இரண்டு அசைகளை ஒன்றாகச் சேர்த்தும் (ஈரசைச்சீர்) மூன்று அசைகளை ஒன்றாகச் சேர்த்தும் (மூவசைச்சீர்) ஓசை பொருந்தி முடிவது சீர் என்று கூறப்படும். **(எ-டு)**

**தாமரை புரையும் காமர் சேவடி** (குறுந்தொகை. கடவுள் வாழ்த்து)

இத்தொடர் ஈரசைகளைக் கொண்ட நான்கு சீராகி ஓசை பொருந்தி முடிந்தது. (தாமரை → தா/மரை)

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி** கொன்ற மகற்கு. (குறள்.110)

இக்குறட்பாவில் மூவசைகளைக் கொண்ட ஐந்து சீர்கள் ஓசை பொருந்தி முடிந்தன. (எந்நன்றி → எந்/நன்/றி).

(11)

**இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும்**

**321. இயலசை மயக்கம் இயற்சீர்[1]; ஏனை**
**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்[2].**

**(இ-ள்)** 1.நேர், நிரை என்பன இயலசைகள். இவ்விரண்டன் கலப்பால் உண்டாகும் சீர் இயற்சீர் ஆகும். 2.மற்ற நேர்பு, நிரைபு என்பவை உரியசைகள். இவற்றின் கலப்பால் உண்டாகும் சீர்கள் ஆசிரிய உரிச்சீர் ஆகும்.

மயக்கம் - ஒருங்கு வருதல். நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கனையும் தம்முள் பெருக்கப் பதினாறு அசைச்சீர்கள் உண்டாகும். நேர், நிரையைத் தம்முள் உறழ நான்கு சீர் உண்டாகும்.

இயற்சீர் (4) - தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்

ஆசிரிய உரிச்சீர் (4) - ஆற்றுநோக்கு (நேர்புநேர்பு), ஆற்றுவரவு(நேர்புநிரைபு), வரகுசோறு (நிரைபுநேர்பு), வரகுதவிடு (நிரைபு நிரைபு). (12)

**உரியசை பின் நிரை வருதல்**

**322. முன்நிரை இறினும் அன்ன ஆகும்.**

**(இ-ள்)** நேர்பு, நிரைபு ஆகிய இரண்டு அசைகளின் பின் நிரையசை வந்து பொருந்தும். அவ்வாறு நிரையை இறுதியாகக் கொண்டு ஈரசை ஆவதும் ஆசிரிய உரிச்சீரே ஆகும். **(எ-டு)**

**யாற்றுமடை** → யாற்று / மடை நேர்பு நிரை
**குளத்துமடை** → குளத்து / மடை நிரைபு நிரை.

இவை இரண்டும் ஆசிரிய உரிச்சீர். (13)

**உரியசை பின் நேர் வருதல்**

**323. நேர்அவண் நிற்பின் இயற்சீர்ப் பால.**

**(இ-ள்)** நேர்பு, நிரைபு ஆகிய இரண்டு அசைகளின் பின் நேரசை வந்து பொருந்தும். அவ்வாறு நேரை இறுதியாகக் கொண்டு ஈரசை ஆவதும் இயற்சீரே ஆகும். **(எ-டு)**

**ஆற்றுக்கால்** → ஆற்று / கால் நேர்பு நேர்
**குளத்துக்கால்** → குளத்து / கால் நிரைபு நேர்.

இவை இரண்டும் இயற்சீர்கள். (14)

**இயலசை முன் உரியசை வருதல்**

**324. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே**
**நிரையசை இயல ஆகும் என்ப.**

**(இ-ள்)** நேர், நிரை என்பன இயலசையாகும். அவ்வசைகளின் முன்னர் நேர்பு, நிரைபு என்னும் உரியசை வந்து பொருந்தும். அவற்றை நிரையசை வந்தாற் போலக் கொள்ளவேண்டும் என்று சொல்லுவர் புலவர். இவ்வாறு வருவதனை இயற்சீராகக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| **மாங்காடு** - மாங் / காடு | | நேர் நேர்பு |
| **களங்காடு** - களங் / காடு | | நிரை நேர்பு |
| **பாய்குரங்கு** - பாய் / குரங்கு | | நேர் நிரைபு |
| **கடிகுரங்கு** - கடி / குரங்கு | | நிரை நிரைபு |

இவை நான்கும் இயற்சீர்கள்.

இவ்ஈரசைச் சீர்கள் பதினாறனுள் இயற்சீர் பத்து. (தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்; ஆற்றுக்கால், குளத்துக்கால், மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு) ஆசிரிய உரிச்சீர் ஆறு. (ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகுதவிடு, யாற்றுமடை, குளத்துமடை). (15)

### உயிரளபெடை அசையாதல்

**325. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.**

**(இ-ள்)** உயிரளபெடை அசையாக நிற்கும் இடமும் உண்டு.

**விளக்கம் :** ஆகலும் என்பதில் உள்ள உம்மை எதிர்மறை உம்மையாகும். எனவே உயிரளபெடை பெரும்பாலான இடங்களில் அசையாகக் கொள்ளப்படுவதில்லை என்பர் இளம்பூரணர். **(எ-டு)**

> **கடாஅ** உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
> **உகாஅமை** வல்லதே ஒற்று. (குறள்.585)

இக்குறட்பாவில் கடாஅ (நிரைநேர்), உகாஅ (நிரைநேர்) என வந்த அளபெடைகள் அசையாகக் கொள்ளப்பட்டன.

> **உப்போஒ** எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்கு
> ஒப்போநீர் வேலி உலகு.

இத்தொடரில் உப்போஒ என்பது நேர்நேர் என அலகிடப்பட்டது. 'ஒ' என வந்த அளபெடை அசையாகும் தன்மை பெறவில்லை. (16)

### ஒற்றளபெடை அசையாதல்

**326. ஒற்றுஅளபு எடுப்பினும் அற்றென மொழிப.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்டதைப் போல் ஒற்றளபெடை அசையாக நிற்கும் இடமும் உண்டு என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

> குறிக்கொண்டு **மரங்ங்** கொட்டி நோக்கி (மலைபடுகடாம்.200)

**கரும்ம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்**
**பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்**
**பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்** (மணிமேகலை. 27 : 150-152)

என்பவற்றுள் மரங்ங், கரும்ம், பசும்ம், செம்ம், பொன்ன், வெண்ண் என ஒற்றளபெடை அசையாகும் தன்மை பெற்றது.

**கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்** (மலைபடுகடாம்.352)

இத்தொடரில் கண்/ண் (நேர்/நேர்) என்பதில் ஒற்று அசையாகும் தன்மை பெற்றது. டண்ண் (நேர்) என்பதில் ஒற்று அசையாகும் தன்மை பெறவில்லை. (17)

## வெண்பா உரிச்சீர் (4)

**327. இயற்சீர் இறுதிமுன் நேர்அவண் நிற்பின்**
**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.**

**(இ-ள்)** மேற்சொல்லப்பட்ட ஈரசைச் சீர்கள் பதினாறாகும் (நூ.324). அவற்றுள் நேர் நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்னும் ஈரசைச் சீர்களின்பின் நேரசை வந்து பொருந்தும். இம்மூவசைச் சீர்கள் நான்கும் வெண்பா உரிச்சீர் ஆகும்.

1. நேர்நேர் நேர் - மாவாழ்கான் 2.நிரைநேர் நேர் - புலிவாழ்கான்
3.நிரைநிரை நேர் - புலிவருகான் 4. நேர்நிரை நேர் - மாவருகான்

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பவை இயற்சீராகிய ஈரசைச் சீர்களாகும். அவற்றின்முன் நேர் என்னும் அசை வர அவை வெண்பா உரிச்சீராகும். இவற்றைப் பிற்காலத்தார் காய்ச்சீர் என்பர். (18)

## வஞ்சி உரிச்சீர் (60)

**328. வஞ்சிச் சீர்என வகைபெற் றனவே**
**வெண்சீர் அல்லா மூவசை என்ப.**

**(இ-ள்)** மேற்சொல்லப்பட்ட மூவசைச்சீர்கள் அறுபத்து நான்கு (நூ.327). அவற்றுள் வெண்பா உரிச்சீர்கள் நான்கு நீங்கலாக எஞ்சிய அறுபதும் வஞ்சி உரிச்சீர்களாகும் என்று சொல்லுவர் புலவர்.

இயற்சீர், ஆசிரிய உரிச்சீர் எனப் பகுத்துக் கொள்ளப்பட்ட ஈரசைச் சீர்கள் பதினாறு (நூ.324). அவற்றை நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கால் உறழ 64 சீர்கள் வரும். அவற்றுள் மேற்கூறப்பட்ட வெண்பா உரிச்சீர் நான்கு (நூ.327). அந்நான்கு நீங்கலாக எஞ்சிய அறுபதும் வஞ்சி உரிச்சீர்களாகும். (19)

**வஞ்சிச் சீர்க்கு உரிய பாவகை**

**329. தன்பா அல்வழித் தான்நடை இன்றே.**

**(இ-ள்)** வஞ்சி உரிச்சீர் அறுபதாகும். அவை வஞ்சிப்பாவைத் தவிரப் பிற பாக்களில் இடம்பெறுவதில்லை. (20)

**வஞ்சிப்பாவில் பிற சீர்கள்**

**330. வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய.**

**(இ-ள்)** வஞ்சிப்பாவினுள் வஞ்சி உரிச்சீர்களே அல்லாமல் பிற சீர்களும் வரப் பெறும்.

**விளக்கம் :** இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்பா உரிச்சீர் என்னும் மூன்றும் வஞ்சிப்பாவிலும் வரும். (21)

**வெண்பாவிற்குப் பொருந்தாச் சீர் மரபு**

**331. வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்**
**இன்பா நேரடிக்கு ஒருங்குநிலை இலவே.**

**(இ-ள்)** வெண்பாவிற்குரியது அளவடியாகிய நேரடி. அவ்வடியில் வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் சேர்ந்து நிற்றல் இல்லை.

நேரடி - 10 எழுத்து முதல் 14 எழுத்து ஈறாக வருவது. இயலசைகளால் வருவது வெண்பா உரிச்சீர். உரியசைகளால் அமைவது ஆசிரிய உரிச்சீர். அவ்விரண்டும் நேரடியில் சேர்ந்து நிற்பதில்லை. இன்பா - வெண்பா. (22)

**கலிப்பாவிற்குப் பொருந்தும் சீர்கள்**

**332. கலித்தளை மருங்கின் கடியவும் பெறாஅ.**

**(இ-ள்)** கலிப்பாவில் இடம்பெறும் நேரடியில் கலித்தளை வருமிடத்து வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் சேர்ந்து நிற்கும். இது நீக்கப்பெறுவதில்லை. (23)

**கலிப்பாவில் இடம்பெறாச் சீர்கள்**

**333. கலித்தளை அடிவயின் நேர்ஈற்று இயற்சீர்**
**நிலைக்குஉரித் தன்றே தெரியு மோர்க்கே.**

**(இ-ள்)** கலிப்பாவிற்குரியது கலித்தளை. அத்தளை பொருந்திவரும் அடியில் நேரீற்று இயற்சீர் நில்லாது என்பது ஆராய்ந்து பார்ப்பவர்க்குப் புலப்பட்டுத் தோன்றும்.

நேரீற்று இயற்சீராவது நேர்நேர்; நிரைநேர். இவை மாச்சீர் அல்லது தேமா, புளிமா என்னும் வாய்பாட்டால் குறிக்கப்படும் நேரீற்று ஈரசைச் சீர்களாகும். (24)

**வஞ்சிப்பாவின் இறுதியில் நில்லாச் சீர்கள்**

**334. வஞ்சி மருங்கினும் இறுதி நில்லாது.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்ட நேரீற்று இயற்சீர் இரண்டும் (தேமா, புளிமா) வஞ்சிப்பாவின் அடியின் இறுதியில் நிற்பதில்லை.

எனவே இவ்விரு சீர்களும் வஞ்சிப்பாவின் அடியின் முதலில் நிற்கும். தேமா, புளிமா ஆகிய சீர்கள் தூங்கல் ஓசையைப் புலப்படுத்தும் ஆற்றல் அற்றவை. எனவே இவை வஞ்சிப்பாவின் இறுதியில் நிற்பதில்லை. (25)

**ஓரசை – சீர் ஆதல்**

**335. இசைநிலை நிறைய நிற்குவது ஆயின்**
**அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.**

**(இ-ள்)** ஓசை நிறைந்து நிற்குமாயின் ஓர் அசையும் சீர் எனக் கொள்ளும் தன்மை பெறும். இதனை யாப்பிலக்கணப் புலவர் நீக்கமாட்டார்.

நாள், மலர், காசு, பிறப்பு என அசைகள் சீராம் தன்மை பெறுதல். (எ–டு)

| | |
|---|---|
| இறைவனடி சேரா **தார்.** | (தார் – நேர் – நாள்) |
| நற்றாள் தொழாஅர் **எனின்.** | (எனின் – நிரை – மலர்) |
| பொருள்சேர் புகழ்புரிந்தார் **மாட்டு.** | (மாட்டு – நேர்பு – காசு) |
| பிறவாழி நீந்தல் **அரிது.** | (அரிது – நிரைபு – பிறப்பு) (26) |

**ஓரசைச் சீர்களைத் தளை கொள்ளுதல்**

**336. இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே**
**தளைவகை சிதையாத் தன்மை யான.**

**(இ-ள்)** ஓரசைச் சீரைத் தளை கொள்ளும் நிலையில் ஈரசைச் சீராகிய இயற்சீரின் ஈற்றைப் போலக் கருதவேண்டும். அதன்வழிச் சிதைவின்றித் தளையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நேரசையை மா (தேமா, புளிமா) போலவும் நிரையசையை விளம் (கருவிளம், கூவிளம்) போலவும் கொள்ள வேண்டும். இவ்வாறு அமைத்துக் கொண்டாலும் அசைச்சீர் அசைச்சீரே; இயற்சீர் ஆகாது. (27)

**தளை – வெண்சீரின் ஈற்றசை**

**337. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.**

**(இ-ள்)** வெண்சீரின் ஈற்றசை நேரசை ஆகும். அதனைத் தளை வழங்குமிடத்து இயற்சீரின் நிரையசை ஈற்றைப் போலக் கொள்ள வேண்டும்.

நிரையசை ஈறு - நிரை நிரை -கருவிளம் ; நேர் நிரை - கூவிளம். (28)

### ஆசிரியப்பாவில் வெண்சீர்

338. **இன்சீர் இயைய வருகுவது ஆயின்**
**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.**

**(இ-ள்)** இனிய ஓசை பொருந்திவரும் நிலையில் ஆசிரிய அடியில் வெண்பா உரிச்சீர் வரும். இதனை யாப்பிலக்கணப் புலவர் நீக்காமல் ஏற்றுக் கொள்வர். **(எ-டு)**

எறும்பி அளையின் குறும்பல் சுனைய (குறுந்தொகை.12)

ஆசிரியப்பாவில் இயற்சீர் வெண்டளையான் அமைந்த வெள்ளடி வந்தது. *(29)*

### ஆசிரியப்பாவில் வஞ்சி உரிச்சீர்

339. **அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்**
**ஒன்றுதல் உடைய ஓரோஒரு வழியே.**

**(இ-ள்)** இனிய ஓசை பொருந்தி வரும் நிலையில் ஆசிரிய அடியில் வஞ்சி உரிச்சீரும் வரும். இவ்வாறு பொருந்தி வரும் நிலை அரிதாக ஒருசில இடங்களில் மட்டுமே அமையும். **(எ-டு)**

**உப்பிலாஅ அவிப்புழுக்கல்**
**கைக்கொண்டு பிறக்குநோக்கா**
**......**
**இழிபிறப்பினோன் ஈயப்பெற்று** (புறநானூறு.363)

என ஆசிரியப்பாவில் வஞ்சியடி கலந்து வந்தது.

**தொல்காப்பியர் கூறும் சீர்களின் தொகை**

1. ஓரசைச் சீர் - 4 (நேர்,நிரை, நேர்பு, நிரைபு)
2. ஈரசைச் சீர் - 16 (இயற்சீர் -10; ஆசிரிய உரிச்சீர் - 6)
3. மூவசைச் சீர் - 64 (வெண்பா உரிச்சீர்-4; வஞ்சி உரிச்சீர்-60). *(30)*

## அடி

### அடி வரையறை

340. **நாற்சீர் கொண்டது அடிஎனப் படுமே.**

**(இ-ள்)** நான்கு சீர்கள் ஒருங்கே தொடுக்கப்பட்டு வருவது அடி என்று சொல்லப்படும்.

**விளக்கம் :** சீர்கள் இரண்டு முதல் பல சேர்ந்து அடியாகும். ஆயினும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்னும் முதன்மை வாய்ந்த பாக்கள் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் இயற்றப்படுபவை. எனவே பெரும்பான்மை பற்றித் தொல்காப்பியர் நான்கு சீர்களைக் கொண்டதையே அடி என வரையறுத்துள்ளார். *(31)*

### தளை, தொடைகளுக்கு இடம்

**341. அடியுள் ளனவே தளையொடு தொடையே.**

**(இ-ள்)** நான்கு சீர்களைக் கொண்ட அடியில் தளையும் தொடையும் அமையும். (32)

### நாற்சீர் அடிக்கே உரியவை

**342. அடிஇறந்து வருதல் இல்என மொழிப.**

**(இ-ள்)** தளையும் தொடையும் நாற்சீர் அடியில் வரும். அவ்வாறின்றி அடியின் நீங்கி வருதல் இல்லை என்று சொல்லுவர் புலவர்.

அடி வரையறை இல்லாதனவற்றில் தளையும் தொடையும் கொள்ளப்படுவதில்லை என்கிறார் இளம்பூரணர். (33)

### பாட்டின் உயிர் அடி

**343. அடியின் சிறப்பே பாட்டுஎனப் படுமே.**

**(இ-ள்)** அடியின் சிறப்பினால் சொற்களின் கூட்டம் பாட்டு என்னும் பெயரைப் பெறும்.

**விளக்கம் :** பாட்டு என்னும் செய்யுளுக்கு அடி இன்றியமையாததாகும். அவ்வடியால் அமையும் பாட்டாவன வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்பனவாகும். (34)

### குறளடி (4 - 6 எழுத்துகள்)

**344. நால்எழுத்து ஆதி ஆக ஆறுஎழுத்து**
**ஏறிய நிலத்தே குறளடி என்ப.**

**(இ-ள்)** நான்கு எழுத்து முதல் ஆறு எழுத்து ஈறாக ஏறிய மூன்று நிலத்தை உடையதைக் **குறளடி** என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் : குறளடி:** மிகவும் குறைந்த எழுத்துகளினால் அமைந்த அடி குறளடி எனப் பெயர் பெறும். நான்கு, ஐந்து, ஆறு என்னும் மூன்று நிலத்தைத் தனக்கு உரியதாகக் கொண்டு நடப்பது குறளடி.

**குறளடி :** சிற்றெல்லை - 4 எழுத்து; பேரெல்லை - 6 எழுத்து.

**எழுத்து வரையறை :** ஓரடியில் இடம்பெறும் எழுத்துகளுள் மெய்யெழுத்து, ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் போன்ற சார்பெழுத்துகள் எழுத்தாகக் கணக்கிடப்படுவதில்லை. அவை நீங்கிய **உயிரும் உயிர்மெய்யும்** ஆகிய இரண்டுமே எழுத்துகளாகக் கணக்கில் கொள்ளப்படும். **(எ-டு)**

**தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து** - நாலெழுத்து
**குன்று கொண்டு நின்ற மாடு** - ஐந்தெழுத்து
**ஆறு சூடி நீறு பூசி** - ஆறெழுத்து (35)

### சிந்தடி (7 - 9 எழுத்துகள்)

345. ஏழ்எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே
ஈர்எழுத்து ஏற்றம் அல்வழி யான.

**(இ-ள்)** சிந்தடிக்கு உரிய அளவு ஏழ் எழுத்து என்று சொல்லுவர் புலவர். அல்லாதவிடத்து அவற்றிற்கு மேல் இரண்டு எழுத்து ஏற்றம் பெறும்.

**சிந்தடி:** குறளடியின் எண்ணிக்கையில் சற்று மிகுந்த எழுத்துகளினால் அமைந்த அடி சிந்தடி எனப் பெயர் பெறும். ஏழ், எட்டு, ஒன்பது என்னும் மூன்று நிலத்தைத் தனக்கு உரியதாகக் கொண்டு நடப்பது சிந்தடி.

**சிந்தடி:** சிற்றெல்லை - 7 எழுத்து; பேரெல்லை - 9 எழுத்து.

**போது சாந்தம் பொற்ப ஏந்தி** - ஏழ்எழுத்து
**தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉம்** - எட்டெழுத்து
**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி** (குறுந்தொகை.2)-ஒன்பதெழுத்து
*(36)*

### நேரடி (10 - 14 எழுத்துகள்)

346. பத்துஎழுத்து என்ப நேரடிக்கு அளவே
ஒத்த நால்எழுத்து ஏற்றுஅலங் கடையே.

**(இ-ள்)** நேரடிக்குரிய எழுத்துகளின் அளவு பத்து எழுத்து என்று சொல்லுவர் புலவர். அதற்கு மேல் ஒத்த நான்கு எழுத்தாகிய பதினான்கு எழுத்துகள் வரையும் ஏற்றம் கொண்டது அளவடியாகும்.

நேரடியின் வேறுபெயர் அளவடி என்பதாகும். மிக்கும் குறைந்தும் அமையாமல் ஒப்ப அளவுபட நடப்பதால் அளவடி அப்பெயர் பெற்றது.

பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு என ஐந்து நிலத்தைத் தனக்குரியதாகக் கொண்டு நடப்பது நேரடி.

**நேரடி:** சிற்றெல்லை - 10 எழுத்து; பேரெல்லை - 14 எழுத்து.

**காமம்** செப்பாது **கண்டது** மொழிமோ (குறுந்தொகை.2) - பத்தெழுத்து
**தாமரை புரையும் காமர் சேவடி** (குறுந்தொகை.க.வா.) - பதினோர் எழுத்து
**நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை** (அகநானூறு.61) - பன்னிரண்டு எழுத்து
**அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி** (பெரும்பாண்.1) - பதின்மூன்றெழுத்து
**யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை** - பதினான்கு எழுத்து *(37)*

### நெடிலடி (15 - 17 எழுத்துகள்)

347. மூவைந்து எழுத்தே நெடிலடிக்கு அளவே
ஈர்எழுத்து மிகுதலும் இயல்புஎன மொழிப.